**MCOP.No. 42/2019**

**Date:17.11.2025**

**எ.ம.சா 1.  பிரபாகரன்**

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 2017 ம் ஆண்டு முதல் ஓட்டுநராக அரசு பேருந்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் எனக்காகவும், 2ம் எதிர்மனுதாரருக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து நடந்த நாளானறு போடிநாயக்கனூரில் இருந்து களியக்காவிளை வரை பேருந்து இயக்க என்னை பணித்திருந்தார். நான் போடிநாயக்கனூரில் மாலை 4.40 மணிக்கு பேருந்தை இயக்கினேன். நான் போடிநாயக்னூரில் இருந்து களியக்காவிளை வரை வர எத்தனை மணி நேரம் ஆகும் என்றால் 9.30 மணி நேரம் ஆகும். விபத்து நடக்கும் போது இரவு 10.00 மணி இருக்கும். நான் வடக்கிலிருந்து தெற்கு முகமாக பேருந்தை இயக்கி வந்தேன். விபத்தில் இறந்த மனுதாரரின் கணவர் முருகன் என்பவர் தெற்கிலிருந்து வடக்காக இடதுபுறமாக சாலை விதிகளை மதித்து சைக்கிளில் வந்தார் என்றால் சரியல்ல. நான் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பேருந்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்காக சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலையத்தில் என் மீது குற்ற எண்.233/2014 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் போடியிலிருந்து களிக்காவிளைக்கு 9.30 மணி நேரத்தில் செல்ல வேண்டும் என்பதால் பேருந்தை அதிவேகமாக ஓட்டி வந்தேன் என்றால் சரியல்ல. பேருந்தை அஜாக்கிரைதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தியதால் நானும் 2ம் எதிர்மனுதாரரும் இறந்து போன முருகன் என்பவரின் வாரிசுகளான மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.